

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் முத்தூர் காங்கேயம் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் அமைச்சர், மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் சீயாத்தமங்கை ஊராட்சியில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விவசாயிகளிடம் இருந்து கெள்முதல் செய்யப்பட்ட நெல்லின் ஈரப்பதம் குறித்து அமைச்சர் அர.சக்கரபாணி ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன், சத்யபிரதா சாஹு , நாடாளுமன்ற உறுப்பினர் வை செல்வராஜ், செல்வ. செங்குட்டுவன் மற்றும் அரசு துறை அலுவலர்கள் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், அணவயல் ஊராட்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில், அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில், அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



அரியலூர் மாவட்டத்தில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பெயரில், சிவசங்கர் அறக்கட்டளை சார்பாக குன்னம் தொகுதி, செந்துறை ஒன்றியம், இரும்புலிக்குறிச்சியில் 'கலைஞர் கணினி பயிற்சி மையத்தை' அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார். உடன் பூ.செல்வராஜ், கே.சி.லூயிகதிரவன், செ.இளஞ்செழியன் மற்றும் கணினி ஆசிரியர்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## 2025 முதலமைச்சர் கோப்பை கல்லூரி மாணவர்களுக்கான

# பளுதூக்குதல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கம் - பரிசுத் தொகை - சான்றிதழ்கள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, அக்.13 -**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2025 முதலமைச்சர் கோப்பை கல்லூரி மாணவர்களுக்கான பளுதூக்குதல் போட்டியில் 88 கிலோ உடல் எடை பிரிவில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து, பரிசுத் தொகை காசோலை, சான்றிதழ் மற்றும் வீரன் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டினார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.10.2025) சென்னை நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற 2025 முதலமைச்சர் கோப்பை கல்லூரி மாணவர்களுக்கான பளுதூக்குதல் போட்டியில் 88 கிலோ உடல் எடை பிரிவில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து, பரிசுத் தொகை காசோலை, சான்றிதழ் மற்றும் வீரன் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டினார்.

தொடர்ந்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற 2025 முதலமைச்சர் கோப்பை கல்லூரி மாணவர்களுக்கான பளுதூக்குதல் விளையாட்டுப் போட்டியில் 98 கிலோ உடல் எடை பிரிவில் வீரர்கள் பளுதூக்குவதை பார்வையிட்டு, கைத்தட்டி உற்சாகப் படுத்தினார்.

மேலும், இன்று நடைபெற்ற 2025 முதலமைச்சர்கோப்பைவிளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுடன் உணவு அருந்தினார். 2025 முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற வீராங்கனைகளிடம் விளையாட்டுப் போட்டிகளின் ஏற்பாடுகள், பங்கேற்பு குறித்து துணை முதலமைச்சர் அவர்கள் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற வீராங்கனைகள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் தன்புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் உடனிருந்தனர்.

# சென்னையில் பனை விதைகள் நடும் பணி!

*சென்னை, அக்.13 -*

*நேற்று (10.10.2025) மேயர் திருமதி ஆர்.பிரியா, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 1 முதல் 15 வரையிலான அனைத்து மண்டலங்களிலும் 1.50 இலட்சம் பனை விதைகள் நடும் பணியினைத் தொடங்கி வைக்கும் விதமாக, பெருங்குடி மண்டலம், பாலவாக்கம் கடற்கரையில் பனை விதையினை நட்டு தொடங்கி வைத்தார்.*

*மேலும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் "நம்ம தங்கா" விழிப்புணர்வு சின்னத்தினை அறிமுகப்படுத்தினார்.*

*பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பசுமைப் பரப்பினை அதிகரிக்கும் வகையில், கடந்த நான்கரை ஆண்டுகளில் மொத்தம் 4,26,429 எண்ணிக்கையிலான பாரம்பரிய நாட்டு வகை மரங்கள் நட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் புதிய மரக்கன்றுகள் நடும் பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.*

*முதலமைச்சர் அவர்கள் பனை மரங்களை தமிழ்நாட்டில் அதிகளவில் நடுவதற்கு உத்தரவிட்டு, அதன்படி தமிழ்நாடு முழுவதும் பனை விதைகள் நடும் பணி பெரும் இயக்கமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*இதன் தொடர்ச்சியாக, கடல் அரிப்பினைத் தடுத்து, கடல்சீற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்திடும் வகை யில், மக்களுக்கு நலன் தரும் மரமாக, தமிழ்நாட்டின் மரமான பனைமரத்தின், விதைகளை பெருநகர சென்னை மாநகராட்சி கடற்கரைப் பகுதிகள் மற்றும் குளக்கரைப் பகுதிகள் உள்ளிட்ட பகுதிகளில் மாபெரும் பனை மர விதைகளை விதைக்கும் பணி நடைபெற்றது.*

*இதில் சென்னை கடற்கரைப் பகுதிகளில் உள்ள 45 இடங்களில் சுமார் 85,000 பனை விதைகளும், 41 நீர்நிலைப் பகுதிகளில் 65,000 பனை விதைகளும் நடப்படுகிறது.*



கோவை மாநகராட்சி, மத்திய மண்டலம், வார்டு எண்.31க்குட்பட்ட சம்பத் வீதி அருகில், சங்கனூர் பள்ளத்தில் வரவு செலவு நிதியின் கீழ் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் ஆர்.சி.சி. பாலம் கட்டும் பணியினை மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் துவக்கி வைத்தார். இதில் விஜயகுமார், மீனாலோகு, நித்யா, கருப்பசாமி, ஹேமலதா, வைரமுருகன், கலாவதி, குணசேகரன், சரவணக்குமார் ஆகியோர் உள்ளனர்.



கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் ஒன்றியம், வெள்ளிமலை பட்டினம் ஊராட்சி, விராலியூர் கிராமத்தில் செல்வி என்ற பெண் கடந்த சில நாட்களுக்கு முன்பு காட்டு யானை தாக்கி மரணம் அடைந்த நிலையில் அவரது குடும்பத்திற்கு தமிழ்நாடு அரசு சார்பில் அறிவிக்கப்பட்ட ரூபாய் 10,00,000க்கான காசோலையை நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஆகியோர் வழங்கினர். இதில் சாமிபையன், என்.ஆர்.கார்த்திகேயன், ரமேஷ், தண்டபாணி, சென்னை சிவா உள்பட வனத்துறை அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

# பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் 1.21 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள்!

## மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

*கிருஷ்ணகிரி, அக். 13-*

*கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, நாகோஜனஹள்ளி பேரூராட்சி, வேலம்பட்டியில் ரூ.76 இலட்சம் மதிப்பீட்டில் வேலம்பட்டி அரசுமேல்நிலை பள்ளியில் வகுப்பறை கட்டிடம் அடிகல் நாட்டுதல் மற்றும் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் பேருந்து நிழற்கூடம் அமைக்க பூமி பூஜை, ரூ.23 இலட்சம் மதிப்பீட்டில் வேலம்பட்டி 4வது வார்டு பேவர்பிளாக் மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் என மொத்தம் 1.21 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளை துவக்கி வைத்து, பர்கூர் சட்டமன்ற தொகுதி நாகோஜனஅள்ளி பேரூராட்சியில் 43 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணைகளை வழங்கி, நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை தூக்கி வைத்து நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை வழங்குவதை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.*

*இந்த நிகழ்ச்சிகளில் பேரூராட்சி தலைவர் தம்பிதுரை , ஒன்றிய செயலாளர் மகேந்திரன் , இளைஞரணி அணி துணை அமைப்பாளர் சங்கர், மாணவரணி அமைப்பாளர் ஜெயேந்திரன் , பேரூராட்சித் துணைத் தலைவர் குமார் , தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் சுரேந்தர் உள்ளிட்ட நிர்வாகிகள் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.*



திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டல மாதாந்திர ஆலோசனைக் கூட்டம் மண்டலக் குழுத்தலைவர், தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. இதில் துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், குமரன், ஆறுமுகம் உள்பட மாமன்ற உறுப்பினர்கள், அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




கோவை தெற்கு மாவட்டம், சூலூர் வடக்கு ஒன்றியம், கரவளி மாதப்பூர் ஊராட்சியில் ரூ.99.40 இலட்சம் மதிப்பீட்டில் கரவளி மாதப்பூர் முதல் செங்கத்துறை வரை சாலை மேம்பாடு செய்யும் பணிகளை கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார். இதில் சிபி கே.செந்தில்குமார், சூலூர் பிரபு, தங்கராஜ், செல்வராஜ், ஆர்.செல்வராஜ், மாதப்பூர் ஜெயக்குமார், தங்கராஜ், எம்.ராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.